# ஸூரா அல் பாத்திஹாவின் விளக்கம் – (தொடர் – 02)

## تفسير سورة الفاتحة

**Moulavi M.M.Zaky B.A. (Hons)**

### C - நோக்கங்களும் கருத்துக்களும்

- உயர்ந்த பூரணமான பண்புகளைக் கொண்டு அல்லாஹ்வைப் புகழ்தல் கடவுள் தன்மையில் இழுக்கையும் குறைபாடுகளையும் ஏற்படுத்தக்கூடிய பண்புகளைவிட்டும் அவனைப் பரிசுத்தப்படுத்தல். இதன் பின்னணியில் வணக்கவழிபாடுகள் அனைத்துக்கும் உரியவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்பதை நிறுவுதல். அவ்வாறே மரணத்திற்குப்பிறகு மனிதன் எழுப்பப்பட்டு கூலி வழங்கப்படுதலை உறுதிப்படுத்தல்.
- தூய எண்ணத்துடன் வணக்கவழிபாடுகளை நிறைவேற்றுமாறு கட்டளையிடல், அல்லாஹ்வின் துனையின்றி மனிதன் சுயமாக எதனையும் மேற்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளல்.
- அல்லாஹ்வின் வழியைப் பின்பற்றி நடப்பது மட்டுமே அவனுடைய பொருத்தத்தைத் தேடித்தரும். அவனுடைய வழியை ஏற்று நடக்காததோர் அவப்பெயருக்குரியோரும், துர்ப்பாக்கியசாலிகளுமாவர்.
- அல்லாஹ்வுடைய வழியை ஏற்றுநடப்போருக்கு அவன் வாக்களித்துள்ள நற்கூலிகள் பற்றிய நன்மாராயமும், அவனுடைய வழியை புறக்கணித்து நடப்போருக்கு அவன் சித்தப்படுத்திவைத்துள்ள தண்டனைகள் பற்றிய எச்சரிக்கையும்.
- குர்ஆன் உள்ளடக்கியுள்ள முன்னைய சமூகங்களின் வரலாறுகள்

இதனை வலியுறுத்தி வந்தார்கள்:

ஹஸ்ரத் உமர் பின் அபீ சலமா (ரழி) அவர்கள் கூறியதாவது: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் மடியில் வளர்ந்தேன் (ஒருமுறை) எனது கை உணவுத்தட்டில் (அங்குமிங்குமாக) அளைந்து கொண்டிருந்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குழந்தாய்! (உண்ணும்போது) அல்லாஹ்வின் பெயரை (பிஸ்மில்லாஹ்) சொல்வாயாக! உன் வலக்கரத்தால் உண்பாயாக! உன(து கை)க்கு அருகிலிருக்கும் பகுதியிலிருந்து எடுத்து உண்பாயாக" என்று கூறினார்கள்.

(நூல்: புகாரி : 5376, 5377, 5378)

ஹஸ்ரத் சலமா பின் அல் அக்வா஁ (ரழி) அவர்கள் கூறியதாவது:

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு அருகில் இடக்கையால் உணவு உண்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “வலக்கையால் உண்பீராக!” என்று சொன்னார்கள். அவர், “என்னால் முடியாது” என்றார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “உம்மால் முடியாமலே போகட்டும்!” என்று சொன்னார்கள். அகம்பாவமே அவரை (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படாமல்) தடுத்தது. அவ்வாறே அவரால் தமது வாய்க்குக் கையை உயர்த்த முடியாமல் போனது.

(நூல்: முஸ்லிம்: 4110)

மேற்கூறிய நபி மொழிகளில், உண்பது, பருகுவது ஆகியன வலக்கையையலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டுள்ளது. இதிலிருந்து வலக்கையால் உண்பது, பருகுவது இரண்டுமே கடமையான செயல்களாகும், என்பதும் இடக்கையால் அவற்றைச் செய்வது தடைசெய்யப்பட்ட செயல்கள் என்தும் தெரியவருகின்றது. அவ்வாறே, இடக்கையால் சாப்பிடுவது, பருகுவது ஆகியன ஷைத்தானுடைய செயல்களாகும். ஷைத்தானுக்கு ஒப்பாக நடப்பதும் தடைசெய்யப்பட்டதாகும். யார் ஒரு கூட்டத்துக்கு ஒப்பாக நடக்கின்றாரோ அவரும் அவர்களைச் சார்ந்தவன் ஆவான்.

ஆகவே, நற்செயல்கள், விரும்பத்தக்க செயல்கள் போன்ற அனைத்திலும் வலக்கரத்தை முற்படுத்தவேண்டும். இதுவே நபிவழியாகும்.

விரும்பத்தகாத, அருவருக்காத்தக்க செயல்களில் இடதுபக்கத்தையும் இடக்கரத்தையும் முற்படுத்த வேண்டும்.

ஆகவே, வுழூச் செய்தல், குளித்தல், தயம்மும் செய்தல், ஆடை அணிதல், பாதணி அணிதல், கீழாடை அணிதல், பள்ளிவாசலில் நுழைதல், வீட்டில் நுழைதல், சுர்மா இடல், நகம்களைதல்., மீசையைக் கத்தரித்தல், தலை சீவுதல், தலைமுடி மழித்தல், தொழுகையில் ஸலாம் கொடுத்தல், உண்ணல், பருகுதல், முஸாபஹா (கைலாகு) செய்தல், கொடுத்தல், எடுத்தல், ஹஜருல் அஸ்வத் கல்லுக்கு சைக்கினை செய்தல், ருக்னுல்யமானியைத் தொடல் போன்ற விரும்பத்தக்க செயல்கள் அனைத்திலும் வலது பக்கத்தையும், வலக்கரத்தையும் முற்படுத்த வேண்டும்.

மேலும், பள்ளிவாசலிலிருந்து வெளியேறல், குளியலறைக்குச் செல்லல், உமிழ்தல், மலசல கூடத்தினுற் செல்லல், மலசலம் கழித்துவிட்டுத் துப்பரவு செய்தல் போன்ற செயல்களில் இடது பக்கத்திற்கும், இடக்கைக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஆகவே உண்பது, பருகுவது இரண்டுமே வலக்கையால் நடைபெறவேண்டும், உண்ண ஆரம்பிக்கும் போது பிஸ்மில்லா சொல்ல வேண்டும். தமது முன்னாலிருப்பவற்றிலிருந்து சாப்பிட வேண்டும். இவை சில ஒழுக்கங்களாகும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.